# நாலடியார் வலியுறுத்தும் இயற்கையோடு இசைந்த வாழ்வு

**Eco-friendly Lives Heralded by *Naladiyar***

மு.சங்கர் / Sangar Munisamy[1]

***Abstract***

The world is emphasizing the awareness to preserve the nature. The main reason for this is the fear that the humankind will be destroyed without nature. The UN, the largest organization in the world, has initiated serious measures to maintain the nature of this earth. It regularly advises member countries to reduce the organic excretion. The Tamils since the beginning of their civilization live their life with nature. Our literatures also emphasize this. The *Naladiyar*, the intellectual creation of the Tamils, still practical in today's scientific era teaches us to live a natural life. The objective of this research paper is to emphasise ways that have been taught by *Naladiyar* towards an environmentally friendly life.

Date of submission: 2019-05-11
Date of acceptance: 2019-08-20
Date of Publication: 2019-12-31
Corresponding author's Name:
Sangar Munisamy
Email: m_sangar@hotmail.com

**Key Words:** *Naladiyar*, nature, environmentally friendly life, Tamils, civilization

## முன்னுரை

உலகில் நிலவும் பல அரசியல் சர்சைகள், உள்நாட்டுப் போர்கள், தீவிரவாதத் தாக்குதல்கள் ஆகியவற்றுக்கிடையேயும், இயற்கை குறித்தும், பருவநிலை மாற்றம் குறித்தும் உலக ஊடகங்கள் 2018லும் 2019 லும் மிகப் பரவலாகப் பேசியும் எழுதியும் வந்துள்ளன. பன்னாட்டு ஊடகங்கள் முதல், வட்டார தேசிய நிலை ஊடகங்கள் வரை 2018 ஆம் ஆண்டு மட்டும் இயற்கை தொடர்பான ஏறக்குறைய 2400 கட்டுரைகளையும் எழுத்துப் படிவங்களையும் வெளியிட்டுள்ளன (Robert, 2019, p.2).

அளவுக்கு அதிகமான கரிம (carbon) வெளியேற்றம் உலகுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது. இது சுற்றுச்சூழலுக்கு அதிகளவு மாசினை ஏற்படுத்தி; மனிதர்கள் மட்டுமல்லாமல் இதர உயிரினங்களுக்கும் அழிவைக் கொண்டுவரும் மிகப் பெரிய இடரை ஏற்படுத்தியுள்ளது. கரிவளி (carbon dioxide) வெளியேற்றம், நேரடி வெப்பத்தைத் தவிர்க்கும் அடுக்குத்திரள் மேகங்கள் அழித்து பூமிக்கு கடும் வெப்பத்தை ஏற்படுத்துகிறது (Topio, 2019:1). வடதுருவத்தில் வெப்பநிலை இருமடங்காக அதிகரித்துள்ளது (Caroline, 2019:1).

இயற்கைக்கு ஏற்பட்டுள்ள இடர்கள் மனுக்குலத்துக்கு விளைவிக்கும் துன்பங்கள் பற்றிய பல செய்திகளை நாம் தொடர்ந்து பார்த்தும் கேட்டும் வாசித்தும் வருகிறோம். இயற்கை பற்றிய விழிப்புணர்வு, இதுகாறும் இல்லாத அளவுக்கு இப்போது மனுக்குலத்திடையே தோன்றத் தொடங்கியுள்ளது. மனிதர்கள் இயற்கையைப் பேணுவது குறித்து இன்னும் அதிகம் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் (Caroline, 2019, p.2).

[1] The author is a doctoral research student in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. m_sangar@hotmail.com

## நாலடியார்

*நீதிநூல்களுள் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்பாகக் கருதப்படும் நூல் நாலடியார் (குருசாமி, 2002,* p.vi*). இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நான்கடி வெண்பாக்களால் ஆக்கப்பட்டு நாலடியார் எனப் பெயர் பெற்றது. சமண முனிவர்கள் பாடிய பாடல் தொகுப்பே நாலடியார். பதுமனார் என்பாரால் தொகுக்கப்பெற்று 'நாலடி' எனப் பெயர் சூட்டப்பட்டது. கி.பி இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுப் வரை எழுதப்பட்ட பாடல்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன (பழனிவேல் பிள்ளை, 1947,* p.15*)*

## நாலடியார் வலியுறுத்தும் இயற்கை

### மன்னருக்குள்ள (அரசாங்கத்துக்கு) பொறுப்பு

*நாலடியார் புலவர்கள் நாட்டு மன்னர்களை முன்வைத்தே இயற்கையைக் குறிப்பிட்டுள்ளனர். இதன்வழி, மன்னர்கள் தங்கள் நாட்டின் இயற்கை வளத்தைப் பேண வேண்டும் என்பதை நாலடியார் வலியுறுத்துவதைக் காண முடிகிறது. இன்றைய நிலையில் அரசர்களின் கடமையை நாட்டு அரசாங்கங்கள் எடுத்துக்கொண்டுள்ள நிலையில், இப்பாடலில் அரசர்கள் எனக் குறிப்பிடப்படது அரசாங்கத்தின் கடமையாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதன்வழி, அந்தந்த நாடுகளின் இயற்கை வளத்தைப் பேணவேண்டியது அந்தந்த அரசாங்கங்களின் முதன்மைக் கடமை என்பதை நாலடியார் தெளிவுறக் கூறுகிறது.*

*இயற்கை வளம் நீடித்து நிலவும் நாட்டில் மன்னராட்சி (அரசாங்கம்) செழிக்கும். நாடு செழிப்பாக இருந்தால்தான் மன்னர் (அரசாங்கம்) தொடர்ந்து நிலைத்திருப்பார் என்ற கருத்தினை இப்பாடல்களின் வழி நாலடியார் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது.*

*"மாதர் வண்டு ஆர்க்கும் மலி கடல் தண் சேர்ப்ப!*

*ஆவது அறிவார்ப் பெறின்?"*

*(பாடல் 73)*

*மலர்களிலெல்லாம் அழகான வண்டுகள் ஆரவாரிக்கும் குளிர்ச்சி நிறைந்த கடற்கரையை உடைய நாட்டின் தலைவ! என்று மன்னரைக் குறிப்பிடுகிறது இந்த நாலடிப் பாடல். நாட்டு மன்னரை நேரடியாகக் குறிப்பிடாமல், அந்நாட்டின் இயற்கை வளம் சொல்லப்படுவதன் வழியாக மன்னர் குறிப்பிடப்படுகிறார். இது நாலடியார் புலவர் இயற்கைக்கு தரும் முதன்மையைக் காட்டுகிறது.*

*"பழியொடு பட்டவை செய்தல் வளியோடி*

*நெய்தல் நறவுயிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப" (பாடல் 108)*

*காற்று வீசுவதால், நெய்தல் மலரின் தேன் சிந்துகின்ற நீண்டு பரந்த கடலின் குளிர்ந்த கரையை உடையவனே என்று மன்னரைக் குறிப்பிடுகிறது மேற்கண்ட நாலடியார். அறிஞராய்த் திகழ்வதோடு பழியில்லா நல்வினைகளும் செய்து புண்ணியப் பேறு உடையவராக மன்னர் திகழ வேண்டும் என்பது இப்பாடலின் வழி புலவர் உரைக்க வரும் கருத்தாகும். ஆயினும், மன்னரை விளிக்க புலவர் அந்நாட்டின் இயற்கை வளத்தை முன்வைக்கிறார். இயற்கையின் வழியாக மன்னரை விளித்து அவர் கொள்ளவேண்டிய பண்புகள் உரைக்கப்படுகின்றன. இதன்வழி நாலடியார் புலவர்கள் இயற்கை மீது கொண்ட நேயத்தை நன்கறியமுடிகிறது.*

*"கோதை அருவிக் குளிர் வரை நல் நாட!*

*பேதையோடு யாதும் உரையற்க!"*

*( பாடல் 71)*

*மாலைபோல ஓடி வருகின்ற அருவிகள் பொருந்திய நல்ல மலையை உடைய மன்னனே என இப்பாடலில் புலவர் மன்னரை விளிக்கிறார். தகுதியற்றவர்களுடன் பேசாமல் ஒதுங்கி விடுவதே நல்லது என்ற கருத்தை புலவர்*

இப்பாடலின் மூலமாக வலியுறுத்துகிறார். ஆயினும் இக்கருத்தை முன்வைப்பதற்கு, அவர் இயற்கையின் துணைகொண்டு நாட்டு மன்னரை குறிப்பிடுகிறார். புலவர் கூற வரும் கருத்தானது; மன்னர் மூலமாக மக்கட்கு உரைக்கப்படும் கருத்தாகும். இங்கு, புலவர் இயற்கையை முன்னிறுத்துவது, இயற்கைக்கு அவரளிக்கும் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறது.

*“கலந்தாரைக் கைவிடுதல்கானக நாட!*

*விலங்கிற்கும் விள்ளல் அரிது!”*

*(பாடல் 76)*

காடுகள் சிறந்த நாடனே; காடுகளைப் பேணி வரும் தலைவனே என்று இப்பாடல் மன்னரை விளிக்கிறது. ஆக மன்னர்க்கழகு காடுகளைப் பேணுதல் என்பதை இந்த நாலடியார் பாடல் மூலம் நன்குணரலாம். மன்னர் காடுகளைப் பேணுவதன் மூலம் இயற்கையைப் பேணவேண்டும்; பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை இப்பாடல் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது.

## நிலையாமைக்கு மேற்கோளாக அமையும் இயற்கை

யாக்கை நிலையாமை என்ற அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடல்களிலும் இந்த உடல் நிலையாமைக்கு இயற்கையைத் துணைக்கழைத்துக் கொள்கின்றனர் நாலடியார் புலவர்கள்.

*“மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்*

*தலைமிசைக் கொண்ட குடையர் நிலமிசைத்*

*துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்*

*எஞ்சினார் இவ்வுலகத் தில்”*

*(பாடல் 21)*

மலையின் மீது காணப்படும் சந்திரனைப் போல, யானைத் தலையின் மீது பிடித்த குடையுடைய அரசர்களும், உலகில் இறந்தனர் என இகழப்பட்டார்களே அல்லாமல், இவ்வுலகில் இறவாது எஞ்சி இருந்தவர் யாரும் இல்லை. மன்னாதி மன்னர்களும் மாண்டனர் என்றதனால் யாக்கை நிலையாமை உணர்த்தப்பட்டது. இப்பாடலில் மன்னர்களை பற்றிப் பாடும் கவிஞர் இயற்கையை எடுத்துக்காட்டாக குறிப்பிடுகிறார். அரசரின் தோற்றத்தை இயற்கையைக் கொண்டு வருணித்துள்ளார் கவிஞர், இப்பாடலின் நோக்கம் நிலையாமையைப் பற்றிக்கூறுவதாக இருந்தாலும், இயற்கை அதனுடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது.

*“படு மழை மொக்குளின் பல் காலும் தோன்றி,*

*கெடும், இது ஓர் யாக்கை’ என்று எண்ணி, ‘தடுமாற்றம்”*

*(பாடல் 27)*

வீழ்கின்ற மழை நீரிலே தோன்றும் குமிழிபோல பலமுறை தோன்றியழியும் ஒருவகைப் பொருள் இந்த உடம்பு என்று உவமை கூறுகிறது இந்தப் பாடல். நிலையாமைக்கு உவமை கூறவந்த புலவர் இயற்கையை அதாவது மழைக்குமிழியை அதற்குப் பயன்படுத்திக்கொண்டுள்ளார். மழை நீரில் தோன்றும் குமிழிபோல இந்த வாழ்க்கை நிலையானதன்று; விரைவில் காணாமற்போகக்கூடியது என்ற முதன்மைக் கருத்து இப்பாடலின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டாலும், அதற்கு எடுத்துக்காட்டாக இயற்கையைத் துணையாகக் கொள்கிறார் புலவர்.

## வினையில் இயற்கை

வினைகளை உதாரணங்காட்டுவதற்கு மழையையும் பசுங்கன்றையும் நாலடியார் குறிப்பிட்டுச் சொல்கிறது.

*“பல் ஆவுள் உய்த்துவிடினும், குழக் கன்று*

*வல்லது ஆம், தாய் நாடிக் கோடலை; தொல்லைப்*

*பழவினையும் அன்ன தகைத்தே, தற்*

*செய்த*

*கிழவனை நாடிக் கொளற்கு.”*

(பாடல் 101)

பல ஆக்களின் இடையில் செலுத்திவிடப்பட்டாலும் இளைய ஆன்கன்று, தன் தாயைத் தேடித் தெரிந்தடைதலைப் போன்று பிறப்புக்கள் தோறும் தொன்று தொட்டுவரும் பழவினையும் தன்னைச் செய்த உரிமையாளனைத் தேடி அடையும் தன்மையுடையதேயாகும். கன்று பசுவைத் தேடிச் செல்வது இயல்பானவொன்று. இந்த இயற்கையான இயல்பைக் கொண்டு புலவர், வினைக்கொள்கையை விளக்குகிறார். வினைக்கொள்கையை தெளிவாக மக்களுக்கு உணர்த்த இயற்கை மிக இயல்பாக இப்பாடலில் கையாளப்பட்டுள்ளது.

## இயற்கை அளிக்கும் தன்முனைப்பு

பின்வரும் பாடல் தன்முனைப்பை அளிக்கும் பாடலாக அமைந்துள்ளது. ஒருவருக்கு தன்னம்பிக்கையை ஊட்ட இயற்கையை உதவிக்கு அழைத்துள்ள நாலடிப் புலவர்களின் சிந்தனை வியந்து பாராட்டுக்குரியது.

*“உறக்கும் துணையது ஓர் ஆலம் வித்து ஈண்டி,*

*இறப்ப நிழல் பயந்தாஅங்கு, அறப்பயனும்,*

*தான் சிறிதுஆயினும், தக்கார் கைப் பட்டக்கால்,*

*வான் சிறிதாப் போர்த்துவிடும்.”*

(பாடல் 38)

சிறிய அளவினதான ஓர் ஆலம் விதை, தழைத்து; மிகவும் நிழல் கொடுத்தாற் போல, அறச்செயல்களின் பயனான புண்ணியத்தைத் தரும் பொருளும், தான் அளவில் சிறியதேயானாலும், தகுதியுடைய பெரியோர் கையிற் சேர்ந்தால், வானமும் சிறிதென்னும்படி அவ்வளவு பெரிய புண்ணியத்தைச் சூழ வைத்துவிடும். ஒரு விதை விருட்சமாவதை இப்பாடல் நமக்கு காட்சிப்படுத்துகிறது. அக்காட்சி மூலம், அறச்செயல் வழியாக நன்மை தரும் பொருள் மிகச் சிறிதெனினும், அதன் பயன் மிகப்பெரியது என்பதை கவிஞர் உணர்த்துகிறார். இயற்கையைக் கொண்டு வாழ்வின் மிகப் பெரிய தத்துவம் இப்பாடலின் வழியாக உணர்த்தப்படுகிறது. தன்முனைப்புத் தூண்டலுக்கும் இயற்கையை மிக நேர்த்தியாக கையாண்டுள்ளது நாலடியார்.

## இயற்கையே இன்பம்

நாலடியார் பாடல்கள் நானூறில், ஏறக்குறைய இருநூறு பாடல்களில் இயற்கை இடம்பெற்றுள்ளது அல்லது எடுத்துக்காட்டாகவும் உவமையாகவும் கூறப்பட்டுள்ளது, புலவர்கள் இயற்கைமீது கொண்டிருந்த நாட்டத்தையும் இயற்கையைப் பேணவேண்டியதன் அவசியத்தை அந்நூல் வலியுறுத்துகிறது என்பதையும் இதன் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

*“ஒண்கதிர் வான்மதியம் சேர்தலால் ஓங்கிய*

*அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம்*

*குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்*

*குன்றன்னார் கேண்மை கொளின்”*

(பாடல் 176)

அழகிய வானத்திலே உள்ள ஒளி பொருந்திய சந்திரனைச் சேர்ந்திருப்பதால், முயல் போலத் தோன்றும் அதனில் விளங்கும் களங்கமும் சந்திரனைத் தொழும்போது சேர்த்து தொழப்படும். அதுபோல, சிறப்பு இல்லாதவராயினும் குன்றுபோலும் உயர்ந்த நற்குணங்கள் உடையாரைச் சேர்வாராயின் பெருமை பெறுவர். நற்குணங்கள் உள்ளவர்களுடன் சேர்பவர் பெருமை பெறுவார் என்பது இப்பாடல் வழி கவிஞர் உணர்த்த வரும் பொருள். அதற்கு அவர் எடுத்தாண்டிருக்கும் எடுத்துக்காட்டு நிலவும் நிலவில் தோன்றும் முயல்போன்ற உருவமும்(களங்கமும்).

*"இரும்பு ஆர்க்கும் காலர் ஆய், ஏதிலார்க்கு ஆள் ஆய்,*

*கரும்பு ஆர் கழனியுள் சேர்வர்;சுரும்பு ஆர்க்கும்*

*காட்டுள் ஆய் வாழும் சிவலும் குறும்பூழும்*

*கூட்டுள் ஆய்க் கொண்டு வைப்பார்."*

(பாடல் 122)

வண்டுகள் ஆரவாரிக்கும் இனிய காட்டில் இருந்து உயிர் வாழும் கவுதாரியையும் காடையையும் கூட்டில் இருந்து வருந்தும்படி பிடித்துக்கொண்டு வந்து சிறை வைப்பவர் இருப்பு விலங்குகளாற் பூட்டப்பட்ட கால்களையுடையராகவேனும் அயலார்க்கு அடிமைப்பட்டவர்களாகவேனும் கட்டுப்பட்டு வலிய பார்நிலத்திலாதல் விளைநிலத்திலாதல் போய்த் தொழில் செய்து உழல்வர். இப்பாடல், சிற்றுயிர்களைச் சிறைப்படுத்துந் தீவினைக்கும் அஞ்சுதல் வேண்டும் என எடுத்துணர்த்துகிறது. காட்டு விலங்குகளைக் குறிப்பிடவரும் நாலடிப் புலவர், காட்டின் இயற்கையை உணர்கிறார்; பாடலை வாசிப்போருக்கும் உணர்த்துகிறார். உயிர்நேயத்தை மிக அழகுற எடுத்துணர்த்த இயற்கை அழகு இங்கே அழகுற கையாளப்பட்டுள்ளது.

*"கொல்லை இரும் புனத்துக் குற்றி அடைந்த புல்*

*ஒல்காவே ஆகும், உழவர் உழுபடைக்கு"*

(பாடல் 178)

கொல்லையாகிய பெரியநிலத்திலுள்ள மரக்கட்டையைச் சேர்ந்து வளர்ந்த புல் உழவரது உழுகின்ற படையாகிய கலப்பைக்குக் கெடாதனவாகும். இப்பாடலில் புலவர் கூறும் கருத்து நல்லார் இனத்தில் சேர்ந்திருப்பார்மேல் பகைவர் சினம் ஒன்றும் செய்ய இயலாது என்பதாம். இத்தகைய அரும் கருத்தை இப்பாடலில் மரக்கட்டையை சேர்ந்த புல் மூலமாக விளக்குகிறார் புலவர். மிகப்பெரும் கருத்துகளை மிக எளிமையாக விளக்க நாலடியார் புலவர்கட்கு இயற்கை கைகொடுத்திருக்கிறது.

## சினத்துக்கு எடுத்துக்காட்டாகும் இயற்கை

*"விரிநிற நாகம் விடருள தேனும்*

*உருமின் கடுன்சினம் சேணின்றும் உட்கும்;*

*அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்*

*பெருமை யுடையார் செறின்"*

(பாடல் 164)

படம் விரிக்கும் பாம்பு நிலத்தின் வெடிப்பினுள்ளே இருந்தாலும், தொலைவில் எழும் இடியோசைக்கு அஞ்சும். அதுபோல மேன்மை மிக்க பெரியோர் சினம் கொள்வாரானால் தவறு செய்தவர் பாதுகாப்பான இடத்தைச் சேர்ந்தாலும் தப்பிப் பிழைக்கமாட்டார் என்பது இந்த நாலடியாரின் பொருளாகும். சினம் எனும் கொடிய குணத்தை விளக்குவதற்கு பாம்பு என்னும் கொடிய நஞ்சுகொண்ட விலங்கை எடுத்துக்காட்டாக கூறுகிறார் புலவர். சினத்தைப் பற்றி கூற வரும்போதும் கூட இயற்கையைத் துணையாக் கொண்டு பாக்களைப் புனைந்துள்ளனர் நாலடியார் புலவர்கள். மனித வாழ்வின் ஒரு குணத்தை விளக்க இயற்கையை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் நாலடியார் புலவர்கள்

## நிறைவு

இயற்கையைப் பேணவும், அதனைப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கவும் தொடர் முயற்சிகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன. உலகின் மிகப் பெரிய பன்னாட்டு அமைப்பான ஐநா முதல் அந்தந்த நாடுகளில் உள்ள மிகச்சிறு இயக்கங்கள் வரை இன்று இயற்கையை நேசிக்கும் முயற்சிகளையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது மிகப் பாராட்டுக்குரியது; வரவேற்கத்தக்கது. நாலடியார் அன்று தொட்டு இந்த இயற்கை இன்பத்தை வலியுறுத்தி வந்துள்ளது. இயற்கை வழி நிற்றலை நாலடியார் மிக அழகாக எடுத்துரைத்துள்ளது. இயற்கையோடு இசைந்த வாழ்வுக்கு அளவுகோலாகவும் எடுத்துக்காட்டாகவும் நாலடியார் திகழ்கிறது.

## References

Kandsamy Pillay M.,R, Muthuratna Mudaliyar S. (1990), *Naladiyar Uraivalam*. Saraswathy Mahal.

Gurusamy, A.S. (2002). *Naladiyar Moolamum Eliya Uraiyum*. Chennai: Sura Books.

Seenivasan, R. (2000). *Naladiyar Cheyyulum Seithigalum*. Chennai: Aniyagam.

Devnath, C.S. (1997), *Magilvodu Vazha Naladiyar Kattum Vazhigal*. Chennai: Narmadha Publications.

Palanivel Pillay, P. (1947). *Naladi Inbam*. Chennai: Thirunelveli South India Saiva Sidhantha Publications.

Sri Chandran, J. (1999). *Naladiyar Moolamum Thelivuraiyum*. Chennai: Varthamanan Publications.

Caroline Voight & others (2019, March 1). *Ecosystem carbon response of an Arctic peatlands to simulated thawing permafrost.* Retrieved from https://www.sciencedaily.com

Robert Mcsweeney. (2019). *Analysis: The climate papers most featured in the media in 2018* retrieved from www.carbonbrief.org.

Topio Schneider. (2019) *Possible climate transitions from breakup of stratocumu lus decks under greenhouse warming*, Journal of Nature Geosciences. Retrieved from https://www.nature.com.